## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் 2013

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 274,025 தொகை குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நுகர்வுப் பொருட்களின் இருப்பு ரூபா 9,340,426 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய நிதி நிலைமைக்கூற்றின் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் இருப்பு ரூபா 9,612,559 ஆக இருந்தது. அதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் மிகை மற்றும் இறுதியிருப்பு என்பன ரூபா 272,133 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணக் கணக்கில் காண்பிக்கப்பட்ட கிரயப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டிற்குரிய பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கிரயப் பெறுமதி பின்வருமாறு மாற்றமடைந்திருந்தது.

| விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் கிரயப் பெறுமதி | பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கிரயப் பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இயந்திர சூத்திரங்களும் ஆய்வுகூட உபகரணங்களும் | 668,100,727 | 694,658,745 | 26,558,018 |
| தளபாடமும் அலுவலக உபகரணங்களும் | 44,733,359 | 39,103,373 | (5,629,986) |

| | | | |
|---|---|---|---|
| கணனி இயந்திரம் | 45,913,890 | 42,617,309 | (3,296,581) |
| நூலகப் புத்தகங்களும் நாளிதழ்களும் | 13,038,343 | 13,893,059 | 854,716 |
| | 771,786,319 | 790,272,486 | 18,486,167 |

**2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில வருடங்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 617,796 இனை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 83,339 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 160,746 கூட்டுத்தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மீளாய்வாண்டின் போதிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டின் மே 30 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் கட்டளை இலக்கம் 16 இன் பிரகாரம் வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கையின் நிபந்தனைகைளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,810,032 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் கீழ் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்த வேண்டிய சம்பளமாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 7,030,873 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 6,980,352 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் 6.5.3 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்டுகளுக்குள் மீளாய்வாண்டின் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)(இ) | உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தினால் 01 மாதம் தொடக்கம் 07 மாதங்கள் வரையிலான காலதாமதத்தில் உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் மெய்மையாய்விற்காக 04 உத்தியோகத்தர்களை யுடைய மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 13,581,898 பெறுமதியான கணனி மென்பொருள் மற்றும் உப பாகங்கள் மற்றும் ரூபா 4,512,594 பெறுமதியான ஏனைய சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய எம்ஓஎப்பீ/ஈஆர்டீ/2011/1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றுநிருபம் | வெளிநாட்டுவள திணைக்களத்திற்கு அறிவிக்காமல் ரூபா 38,469,075 பெறுமதியான கனடா செயற்திட்டம் மற்றும் ரூபா 9,471,996 பெறுமதியான இந்திய இலங்கை செயற்திட்டம் முறையே 2012 ஏப்ரல் மாதத்தின் போதும் 2013 செப்தெம்பர் மாதத்தின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்று நிருபம் | |
| | (i) 01 ஆம் பிரிவு | ஆலோசனைச் சேவைக்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 7.1 ஆம் பிரிவு | ஆலோசனைச் சேவை வருமானத்தில் நேர்க் கிரயம் கழிக்கப்பட்ட பின்னர் 10 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையான தொகை நிறுவனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு திறைசேரியின் விசேட நிதியத்திற்கு 03 மாதங்களுக்கு ஒரு தடவை அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2004 பெப்ரவரி 11 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈஆர்எஸ்ரீ/21-4/வெழும ii ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரின் கடிதம் | ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு மாதச் சம்பளம் அல்லது ரூபா 20,000 தொகை என்ற இரண்டிலும் குறைந்த பெறுமதி ஊக்குவிப்புப் படியாக வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக 307 உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய ஊக்குவிப்புப் படி ரூபா 6,140,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,802,397 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2013 ஆம் ஆண்டிற்காக ஒருவருக்கு ரூபா 27,500 படி 395 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப்படியாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட அளவினைவிட ரூபா 2,962,500 தொகை அதிகரித்து நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீளாய்வாண்டில் நிறுவன செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 39,177,699 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 22,628,443 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி

விளைவுகளில் ரூபா 16,549,256 அதிகரிப்பினைக் காண்பித்தது. இதற்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வின் அடிப்படையில் திறைசேரி மானியம் பதிவழித்தல் 49 சதவீதத்தினாலும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியின் அடிப்படையிலான திறைசேரி மானியம் பதிவழித்தல் 46 சதவீதத்தினாலும் வருமானம் 30 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய வருமானம் 35 சதவீதத்தினாலும் அதிகரித்தமை காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் 38 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (ஆ) தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது 07 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியை விட 03 மாதங்கள் தொடக்கம் 23 மாதங்கள் வரையான தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) ரீஜீ12/00/04 ஆம் இலக்க "Continue the Fabrication of Tape Calibration Facility in IML" செயற்திட்டம் ரூபா 1,000,000 தொகையில் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தை கையாளுகின்ற உத்தியோகத்தர் 2010 சனவரி 17 ஆந் திகதி தொடக்கம் 2012 சனவரி 16 ஆந் திகதி வரை 02 வருட காலம் கற்கை விடுமுறை பெற்றமையின் காரணமாக அந்த செயற்திட்டம் 03 வருட தாமதத்துடன் 2013 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கற்கை விடுமுறை பெற்ற உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறு ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்தி செயற்திட்டத்தை தாமதமின்றி வெற்றியடையச் செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கற்கை விடுமுறைக் காலம் 2 வருடங்களாக இருந்த போதிலும் செயற்திட்டம் 3 வருட கால தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

#### (ஆ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரீஜீ/08/24 ஆம் இலக்க "Replacement of Sulphur Promoting Sqmigat" செயற்திட்டம் மூன்று ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ரூபா 2,000,000 தொகையான திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2011 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 மே மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 93,482 தொகையான கிரயம் செலவிடப்பட்டிருந்தது. இதில் ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தர் 2011 திசெம்பர் 09 ஆந் திகதி ஓய்வு பெற்றுச்செல்வதற்கு

தீர்கமானித்திருந்தமையை கருத்திற் கொள்ளாது செயற்திட்டத்தைத் திட்டமிட்டதன் காரணமாக அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் வேறு ஆராய்ச்சி உத்தியோகத்தரையேனும் ஈடுபடுத்தி செயற்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) எப்பீ 83 ஆம் இலக்க "Enhancing Environmental Performance in Key Sri Lankan Export Sectors – EEPEx" செயற்திட்டம் ஐரோப்பிய சங்கத்தின் யூரோ 683,528 தொகையான நிதியுதவியின் கீழ் 2009 மார்ச் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆகஸ்ட் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக அந்தச் சங்கத்தினால் நிதியுதவி வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நட்டத்தை ஈடு செய்வதற்காக 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதியில் உள்ளவாறு முதிர்வடைந்த யூரோ 81,097.48 பெறுமதியான வரவுத்தாள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ரூபா 36,644 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி நீடிக்கப்படாமல் மீளாய்வாண்டில் 05 மாத காலத்திற்காக ரூபா 581,608 தொகை தனியாார் நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக குறித்த கொள்வனவு நடைமுறைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்காக மாதத்திற்கு ரூபா 32,352 இனால் விலை கூடிய மற்றைய நிறுவனம் 2013 நவம்பர் 11 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

**4.3 பயன்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,815,377 கூட்டுத்தொகையான 03 வங்கிக் கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்படாதிருந்ததுடன் அந்தக் கணக்குகளில் உள்ள பணம் மீளாய்வாண்டின் போது உரிய செயற்பாட்டிற்கு அல்லது ஏனைய வினைத்திறனான நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எப்பீ 96 ஆம் இலக்க "Value Addition to Fruits and Vegetables by Clarifying, Concentrating" செயற்திட்டம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ரூபா 1,920,000 தொகையான நிதியுதவியின் கீழ் 2011 செப்தெம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 654,886 பெறுமதியான இயந்திரம் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 126,910 தொகையினால் அதிகரித்து மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் தேவைகளுக்கு இணங்காமையின் காரணமாக கணக்காய்வுத்திகதியான 2014 யூன் 25 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**4.4. ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

"Waste Water Treatment Plant" என்ற பெயருடைய இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 10,752,000 தொகையில் உப

ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த உப ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பாக சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் செயலாற்றல் பிணை முறியும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உப ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 3,648,000 பெறுமதியான முற்பணப் பிணைமுறி 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அதனை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவைப் பங்களிப்பாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் 2012 ஏப்ரல் 23 ஆந் திகதி தொடக்கம் 4 மாதங்களுக்குள் இயந்திரக் கூடத்தின் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 மார்ச் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இயந்திரக் கூடத்தை செயற்படுத்தும் கைநூல் மற்றும் ஏனைய அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| **தரம்** | **அங்கீகரிக்கப் பட்ட** | **உள்ளபடிய ான** | **ஒப்பந் த** | **மிகை** | **வெற்றிடங்க ள்** |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 52 | 34 | - | - | 18 |
| மூன்றாம் | 148 | 140 | 12 | 4 | - |
| இரண்டாம் | 106 | 101 | 20 | 15 | - |
| ஆரம்ப | 86 | 60 | 13 | - | 13 |
| | 392 | 335 | 45 | 19 | 31 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அதிகரித்துக் கொள்ளாமல் மூன்றாம் நிலையிலுள்ள பதவிக்காக ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 09 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பதவிகளுக்கே 11 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) நிறுவனத்திற்குத் தேவையான சிரேஷ்ட நிலையிலுள்ள பதவியான பிரதான கணக்காளர், பிரதான விற்பனை முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளில் 5 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நிரந்தர உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்காக வெற்றிடம் காணப்பட்ட போதிலும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **நிலைமை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|---|
| சாரதி | 04 | 03 |
| பயிற்சி | 07 | 02 |
| அரைப் பயிற்சி | 14 | 05 |

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.7 மற்றும் 9.10 ஆம் பிரிவு புறக்கணிக்கப்பட்டு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் திறைசேரிச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 06 உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர் 2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் மாற்றப்பட்டிருந்ததுடன் 50 சதவீத தொலைபேசிக் கட்டணப் படி மற்றும் போக்குவரத்துப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை தொலைபேசிக் கட்டணப் படிக்காக ரூபா 200,500 தொகையும் போக்கவரத்துப் படிக்காக ரூபா 548,510 தொகையும் நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 07 விடயங்களுக்காக 16 சதவீதம் தொடக்கம் 349 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனை கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் முறையே 2013 யூலை 23 ஆந் திகதி மற்றும் 2014 யூன் 09 ஆந் திகதிகளில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கொள்வனவு நடைமுறைகள்
(உ) பதவியணியினர் நிருவாகம்
(ஊ) ஒப்பந்த நிருவாகம்
(எ) செயற்திட்ட நிருவாகம்